
பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 17 திங்கட்கிழமை 03.11.2025 கதிர் 358



**இ**னி **து** **ரகசியம் அல்ல!**

எதிர்க் கட்சிகளின் கூட்டுப் பேரணி நவம்பர் 21நுகேகொடவில் ஆளும்தரப்புக்கு எதிராக நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எதிரணிகள் ஒன்று திரண்டு இந்தப் ☞2

## மக்கள் பிரதிநிதிகள் தமக்கு பாதுகாப்பு கோரினால் விசாரித்த பின்னரே முடிவு

### பொலிஸ் மா அதிபர் திட்டவட்டம்

பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படுவதாக கருதும் ஒவ்வொரு மக்கள் பிரதிநிதிகளும் பொலிஸாரிடத்தில் கோரிக்கையை முன்வைக்கின்ற பட்சத்தில் அதுதொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளைக் தொடர்ந்து உரிய பாதுகாப்பு வழங்குவது குறித்த தீர்மானம் எடுக்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அளித்துள்ள தெளிவுபடுத்தல் அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றகூட்டத்தில்மக்கள்பிரதிநிதிகளின் கோரிக்கையின் பேரில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என்று தவறாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்கள் வெவ்வேறு விதமாக அறிக்கை வெளியிட்டுள்ளன. அந்த அறிக்கைகளுடன் நாங்கள் உடன்படவில்லை. பாதுகாப்பு வழங்கப்படுவதென்பது பதவிகளுக்கான பொதுப் படையான உரிமை அல்ல. தங்கள் பாதுகாப்பு குறித்துக்கவலைகொண்ட ஒவ்வொருநபரும் உரியவாறு கோரிக்கையை முன்வைக்க வேண்டும், அதன் பின்னர் அச்சுறுத்தல் குறித்து மதிப்பீடு முன்னெடுக்கப்படும்.

விசேடமாக மக்கள் பிரதிநிதிகளுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளை நியமிப்பதற்கான செயல்முறை, வெறுமனே வேண்டுகோளின்படி வழங்கப்படாது. கோரிக்கையை அடுத்துமுதற்கட்ட விசாரணை பொலிஸாரால் மேற்கொள்ளப்படும். அதேநேரம், ☞2

## ஐ.நா. சைபர் சாசனத்தில் இலங்கையும் கைச்சாத்து

ஐக்கிய நாடுகள் சபையின் சைபர் குற்றங்களுக்கு எதிரான சாசனத்தில் இலங்கை கையொப்பமிட்டுள்ளது.

இதன் மூலமாக தெற்காசிய நாடுகளில் குறித்த சாசனத்தில் கையொப்பமிடும் இரண்டாவது நாடாகியுள்ளது இலங்கை. டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் பதில் செயலாளர் வருண தனபால ஆவணத்தில் கையெழுத்திட்டார்.

இச்சாசனத்தில் இணைந்து கொண்டதன் ஊடாக, ஐக்கிய நாடுகள் சபையின் சைபர் குற்றங்களுக்கு எதிரான சாசனத்தில் கைச்சாத்திட்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உட்பட ஏனைய 72 உறுப்பு நாடுகளுடன் இலங்கையும் இணைந்து கொள்கின்றது.

இச்சாசனத்தில் கையொப்பமிடுவதன்மூலமாகசைபர்குற்றங்களுக்கு எதிரான சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதையும் பாதுகாப்பான டிஜிட்டல் சூழலை ஏற்படுத்துவதையும் இலங்கை இலக்காக கொண்டுள்ளது.

அத்துடன், இலங்கை மூன்று மாதங்களுக்குள் சைபர் பாதுகாப்பை மையப்படுத்தியதாக அமைச்சுக்களுக்கு இடையேயானபொறிமுறையொன்றைத்தொடங்கவுள்ளது. இதுவொரு தேசிய ரீதியான நடவடிக்கைகயின் மையப் புள்ளியாக அமையும் என்றும் அறிவித்துள்ளது.

## அரச வருவாய் அதிகரிப்பு நிதி அமைச்சு அறிக்கை

2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அன்பளிப்புகள் நீங்கலாக அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2,321.7 பில்லியன் ரூவாக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுகுறித்துநிதிஅமைச்சுவெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,860.6 பில்லியனாக இருந்த அரச வருமானம், 2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 24.8 சதவீதம் அதிகரித்து 2,321.7 பில்லியன் ரூபாவை எட்டியுள்ளது. இந்த ☞2

### வரவு செலவுத் திட்ட வரைவு அளிக்கையின்போது

# போராட்டத்திற்கு தயாராகும் நாடாளுமன்ற பணியாளர்கள்

### ஆளும்தரப்பின் மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு

**வரவு செலவு திட்டம் நாடாளுமன்றில் அளிக்கை செய்யப்படும் காலத்தில் நாடாளுமன்ற ஊழியர்கள் சிலர் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தயாராகி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் உள்ள 9 துறைகளைச் சேர்ந்த பணியாளர்களும் இது தொடர்பில் ஒரு இணக்கத்திற்கு வந்துள்ளனர். நாடாளுமன்ற மறுசீரமைப்புத் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழு வழங்கியுள்ள அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்ட முன்முயற்சிகளில் பணியாளர்கள் குதித்துள்ளனர். குழுவின் அறிக்கைக்கு எதிரான ☞2**

## தனிப்பட்ட பாதுகாப்புக்காக துப்பாக்கிகள் தாருங்கள்

### 20 எம்.பிக்கள் கோரிக்கை

தமது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக துப்பாக்கிகளை வழங்குமாறு 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பான கடிதங்களை அவர்கள் சபாநாயகர் ஜகத் விக்கிரத்னவுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ☞2

## எதிரணியின் பேரணியில் பங்கேற்கப்போவதில்லை

### திலித் ஜயவீர எம்.பியும் பின்வாங்கினார்

ஆளும்தரப்புதுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் பேரணியில் பங்குப்பற்ற போவதில்லை என்று சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவரான நாடாளுமன்றஉறுப்பினர்திலித்ஜயவீரதெரிவித்தார். முறையான கொள்கை ஏதும் இல்லாமலே எதிர்க்கட்சிகள் நவம்பர் 21 ஒன்றிணைகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் அனைத்துக் கொள்கைத் திட்டங்களையும் எதிர்க்கும் நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் ☞2

## மஹாபொல புலமைப்பரிசில் நிதி பயன்பாடு தொடர்பில் விசாரணை

### இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு நடவடிக்கை

மஹாபொல புலமைப்பரிசில் நிதியை தவறாகப் பயன்படுத்தியது குறித்து இலஞ்சம் ☞2

## எம்.பிக்களுக்கு துப்பாக்கி தருவதை ஆளும்தரப்பு பரிசீலிக்க வேண்டும்

### சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

துப்பாக்கி வைத்திருப்பது என்பது ஆபத்தானது. இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள்ளே துப்பாக்கியால் சுட்டுக்கொண்ட வரலாறுகளும் உண்டு. ஆகவே உறுப்பினர்கள் துப்பாக்கி கேட்டால் அதைப்பற்றி ஆளும்தரப்பு பரிசீலனை செய்ய வேண்டும் என தமிழ் அரசுக் கட்சி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளராக இருந்து ☞2

## வரவு செலவுத் திட்ட வரைவு நவம்பர் 7 நாடாளுமன்றத்தில்

2026 ஆம் ஆண்டு நிதியாண்டுக்குரிய வரவு, செலவுத் திட்டத்தை அரசுத் தலைவர் நவம்பர் 7 நாடாளுமன்றத்தில் அளிக்கை செய்யவுள்ளார்.

அடுத்தஆண்டுக்கானவரவு,செலவுத் திட்டத்தில்ஏற்றுமதியாளர்கள்,சிறுமற்றும் நடுத்தர தொழில்களுக்கு சலுகைகளும், அத்தியாவசிய பொருட்களுக்கு நிவாரணமும் வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரத்தில் வரி ஈர்ப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளையும் ஆளும்தரப்பு அறிமுகப்படுத்தவுள்ளது.

வரிவசூலைஉறுதிசெய்வதன் ☞2

## இனி இது .....

போராட்டத்தை நடத்தும் என்று முதலில் அறிவிக்கப்பட்டாலும் முதன்மை எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தொடக்கம் பல கட்சிகளும் இப்போது அந்தப் பேரணியில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று ஒவ்வொன்றாகக் கழன்று வருகின்றன. மலையகத் தமிழ்க் கட்சிகள் மற்றும் சர்வஜன அதிகாரம் ஆகியனவும் இந்தப் பேரணியிலிருந்து ஒதுங்குவதாகத் தெரிவித்துள்ளன. வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகளோ வழக்கம் போலவே இது எதிலும் தங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்பதாக ஒதுங்கியே இருகின்றன.

இதற்கெல்லாம் காரணம் ரணில் விக்கிரமசிங்கின் பதவி ஆசை இன்னமும் உயிர்ப்போடு இருப்பதுதான் என்கிறார்கள் சிங்கள மூத்த பத்திரிகையாளர்கள். அவர் எதிர்க் கட்சிகளின் தலைமையை சஜித் பிரேமதாசவிடம் விட்டுக்கொடுப்பதற்குத் தயாராக இல்லை. அதேநேரம் தனது கைதை முன்வைத்து எதிர்க் கட்சிகளிடம் ஏற்பட்ட ஒற்றுமையை அல்லது ஒருங்கிணைவை வேறு எவரும் முதலீடாக்கிக் கொள்ளக்கூடாது என்பதிலும் ரணில் கவனமாக இருக்கிறாராம். அதன் பயன்கள் தனக்கு மட்டுமே கிடைக்கவேண்டும் என்று பிடிவாதமாக இருக்கின்றாராம். இதனால்தால் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு சாத்தியப்படாமலேயே போகின்றது என்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் மத்தியில் தற்போது செல்வாக்கு எதுவுமில்லை. அதனால் நவம்பர் 21 பேரணிக்கு ஆள்களைத் திரட்டுவது சாத்தியமேயில்லை என்கிறார்கள். அதனால், பேரணிக்கு இப்போதைக்கு ஆள்களைக் கொண்டுவரக்கூடியவர் நாமல் ராஜபக்ச மட்டுமே. ஆனால், நாமலோ இந்தப் பேரணியில் முன்னார் அரசுத் தலைவர்கள் எவரும் பங்கேற்கக்கூடாது என்று கருதுகின்றாராம். அப்படி அவர்கள் பங்கேற்றால், அது மக்கள் மனங்களில் அவர்கள் மீதுள்ள கோபம், வெறுப்பு, லஞ்சம் ஊழல் பற்றிய சிந்தனைகளை மீளக் கிளறும் என்பதும், அது பேரணியின் வெற்றிக்குப் பாதிப்பாக அமைந்துவிடும் என்பதும் நாமலின் வாதம். அவரது கருத்தை ஏற்றுக்கொண்டு மகிந்த, மைத்திரி, கோட்டாபய, சந்திரிகா ஆகியோர் பேரணியிலிருந்து விலகியிருக்கத் தீர்மானித்தாலும், ரணில் மட்டும் பேரணியில் தான் பங்கேற்றே தீருவேன் என்பதில் பிடிவாதமாக இருக்கின்றாராம். பேரணியின் வெற்றியை நாமல் சுவீகரித்துவிடக்கூடாது என்பதே அதற்குக் காரணம். இப்படி ரணில் தொடர்ந்தும் தனது அரசியலை மட்டுமே இலக்காக வைத்து எல்லாக் காரியங்களையும் நகர்த்துவதால் இந்தப் பேரணியின் வெற்றி குறித்த சந்தேகங்கள் பெரிதாகிக் கொண்டே செல்கின்றன.

ஆளும்தரப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடனும் நிறைவேற்று அதிகாரத்துடனும் மிகப் பலமாக உள்ள நிலையில், பலவீனமடைந்துள்ள எதிர்க் கட்சிகள் மீண்டெழுவதை ரணிலின் பதவி ஆசை கானல்நீராக்குகின்றது என்கிறார்.

ரணிலோ, இந்தப் பேரணிக்கு முன்னரே நாமல் தலைமையிலான பொது ஜன பெரமுனவுடன் ஐக்கிய தேசியக் கட்சி கைகோர்த்துச் செயற்படவேண்டும் என்று கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் ஒன்றில் பேரணி ஏற்பாடுகளுக்கு முன்னரே வலியுறுத்தியிருந்தார். இந்த இரு கட்சிகளும் ஒருபோதும் ஒன்றிணைந்து செயற்பட முடியாது, கொள்கையளவில் இரண்டு இணங்கிப் போகவே முடியாதவை என்று ஐ,தே.க. மூத்த தலைவர் எவ்வளவோ எதிர்த்தபோதும் தனது முடிவில் ரணில் திடமாக இருந்துள்ளார். இந்தப் பேரணியையும் அவர் அந்த வகையிலேயே பார்க்கிறார் என்று சொல்லப்படுகின்றது. நாமல் வயதில் குறைந்தவராக இருப்பதன காரணமாக அவரைத் தளபதியாக்கிக்கொண்டு, தனது பதவிக் கனவை நனவாக்க முடியும் என்பது அவரது எதிர்பார்ப்பாக இருக்கிறதுபோலும்.

ஆக, மொத்தத்தில் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட இரு முக்கிய கட்சிகளும் தங்கள் செல்வாக்கை மீட்டெடுக்கும் முயற்சியின் ஓர் அங்கமாக நுகேகொட பேரணி இருக்குமேயன்றி அது ஆளும்தரப்புக்கு அழுத்தம் தரக்கூடிய மக்கள் எழுச்சியாக அமைவதற்கு வாய்ப்பில்லை என்பதே கொழும்பில் அரசியல் அவதானிகளின் கருத்து. ரணில் விழிவிட்டால் தவிர இந்தப் பேரணி எந்தவொரு அதிர்வையும் ஏற்படுத்தாது என்கிறார்கள் அவர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## போராட்டத்திற்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது நிலைப்பாட்டை நாடாளுமன்றத்தில் உள்ள 9 துறைகளைச் சேர்ந்த பணியாளர் சங்கங்களும் சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளன.

நாடாளுமன்றத்தில் உள்ள ஒன்பது துறைகளிலும் சுமார் எண்ணூற்று ஐம்பது ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

நாடாளுமன்ற மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க கிட்டத்தட்ட அனைத்து துறைகளும் அதிகாரப்பூர்வமற்ற உடன்பாட்டை எட்டியுள்ளன என்று அறியப்படுகிறது.

வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது இந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற மூன்று நிர்வாக அதிகாரிகள் தலைமையிலான இந்த மறுசீரமைப்புக் குழு, நாடாளுமன்றத்தின் நிர்வாகம் மற்றும் சம்பள மறுசீரமைப்பு குறித்து அறிக்கையைத் தயாரிப்பதற்கென சபாநாயகரால் நியமிக்கப்பட்டது.

நாடாளுமன்ற அனுபவம் இல்லாத ஒரு குழுவினரால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், அது செயல்படுத்தப்பட்டால் அது தமக்கு கடுமையான அநீதியாக இருக்கும் என்று பணியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## தனிப்பட்ட....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கோரிக்கைகள் தற்போது பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அச்சுறுத்தல்கள் குறித்து மேற்கொள்ளப் படும் விசாரணையின் பின்னரே, தகுதியானவர்களுக்கு துப்பாக்கிகளை வழங்குவது குறித்து முடிவெடுக்கப்படுமென ஆளும்தரப்பில் கூறப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பாக கடந்த வாரம் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பாகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க சபாநாயகரும் பொலிஸ் மா அதிபரும் பாதுகாப்புச் சபையில் கலந்துரையாடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தனர்.

## அரச வருவாய் ...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச வருமான உயர்வுக்கு வரி வருமானம் பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளது.

அதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் வரி வருமானம் 2,151.1 பில்லியன் ரூபாவாக 25.9 சதவீதம் அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் 1,709.3 பில்லியன் ரூபவாகக் காணப்பட்டுள்ளது.

இந்த வரி வருமான அதிகரிப்புக்கு மோட்டார் வாகனங்களுக்கான உற்பத்தி வரி வருமானம், பெறுமதி சேர் வரி வருமானம், சுங்க இறக்குமதி வரிகள், வருமான வரி, விசேட வணிகப் பொருட்கள் மீதான வரிகள், சமூகப் பாதுகாப்பு வரிகள், பெற்றோலியப் பொருட்கள் மூலம் கிடைத்த வரிகள், மதுவரி வருமானம், மற்றும் செஸ் வரி போன்ற பல காரணிகள் முக்கியமாகப் பங்களித்துள்ளன.

## எம்.பிக்களுக்கு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறீலங்கா வான் படையின் குண்டு வீச்சில் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட தமிழ்ச்செல்வன் மற்றும் அவர்களோடு சேர்ந்து வீரச்சாவை தழுவிக்கொண்ட ஆறு வீரவேங்கைகளின் 18ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் வட்டார அமைப்பாளர்களுடனான கலந்துரையாடலும் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தலைமையில் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்றது.

அஞ்சலி நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது:

நாட்டில் ஒரு அச்ச சூழ் நிலை உள்ளதாக அரசுத் தலைவரே குறிப்பிடுகின்றார். நீதிமன்றம் வருபவர்களே சுட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பிரதேச சபை தவிசாளர் சுட்டுக்கொல்லப்படுகிறார். போக்குவரத்து பாதையில்கூட எதுவும் நடக்கலாம் என்ற அஞ்சம் உண்டு.

ஆளும்தரப்பின் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கையை நாம் வரவேற்கின்றறோம். போதைப்பொருள் பாவணை என்பது தென்னிலங்கையில் மாத்திரம் அல்ல. வடமாகாணத்திலும் உள்ளது. இதனால் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் பாதுகாப்பு அல்லது துப்பாக்கிகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்பது அவர்களின் தனிப்பட்ட உரிமை. 2010ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக முதன் முதல் தெரிவு செய்யப்பட்டபோது எனக்கும் துப்பாக்கி வழங்கப்பட்டது. அதனை குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு பின்பு மீள ஒப்படைத்தேன்.

துப்பாக்கி வழங்கப்பட்டால் அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள்ளே சுடுபட்ட வரலாறுகளும் உண்டு. துப்பாக்கி வைத்திருப்பது என்பது ஆபத்தானது.

உறுப்பினர்கள் துப்பாக்கி கேட்டால் உடனே தூக்கிக் கொடுத்துவிடக்கூடாது. அதைப்பற்றி ஆளும்தரப்பு பரிசீலனை செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பு ஆளும்தரப்பிடம் உள்ளது.

மக்கள் பிரதிநிதிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும். இதுவரை நான் ஆயுதம் கோரவில்லை. எனக்கு ஆளும்தரப்பு எனக்கு ஆயுதம் தந்தால் பயிற்சி தேவையில்லை எனத் தெரிவித்தார்.

## வரவு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரி மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவற்றின் வருமான இலக்குகளை உயர்த்துவதே, இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

அதன்படி, இந்த மூன்று நிறுவனங்களுக்கும், 4.6 ட்ரில்லியன் என்ற மதிப்பிடப்பட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தற்போதைய இலக்கை காட்டிலும், 600 மில்லியன் ரூபா அதிகரிப்பைக் குறிக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, அந்நிய நேரடி முதலீடுகள் மற்றும் ஏற்றுமதிகளை அதிகரித்து அந்நிய செலாவணியை திரட்டக்கூடிய நடவடிக்கைகளையும் ஆளும்தரப்பு அறிமுகப்படுத்தவுள்ளது.

அத்துடன், வாகன இறக்குமதிக்கு விதிக்கப்படும் வரிகளும் மாறாமல் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் கொண்ட குழுக்களுக்கு, ஆளும்தரப்பு பாதீட்டில் நிவாரணப் பொதியை அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் 2025 ஜீன் இறுதி நிலவரப்படி ஆளும்தரப்பின் வெளிநாட்டுக் கடன் 37.1 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

மொத்த அரச வெளிநாட்டுக் கடனில் பல தரப்புக் கடன் 36 சதவீதமாகும். அதைத் தொடர்ந்து வணிகக் கடன் 34 சதவீதமாகவும், இருதரப்புக் கடன் 30 சதவீதமாகவும் உள்ளது.

## எதிரணியின்...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

தேசிய தொழிற்றுறையை மேம்படுத்த ஆளும்தரப்பிடம் எவ்வித திட்டங்களும் கிடையாது. கடந்த ஆளும்தரப்பு எவ்வாறு செயற்பட்டதோ அதே வகையில்தான் இந்த ஆளும்தரப்பும் செயற்படுகிறது.

பெற்றுக் கொண்ட அரசமுறை கடன்களை திருப்பி செலுத்த முடியாத காரணத்தால்தான் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. இந்த ஆளும்தரப்பும் கடன் பெறுவதையே பிரதான இலக்காக கொண்டுள்ளது.

ஆளும்தரப்பின் செயற்பாட்டை எதிர்க்கும் வகையில் எதிர்க்கட்சிகள் பலமாக இல்லை. நவம்பர் 21 ஆளும்தரப்புக்கு எதிராகப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்தப் பேரணியில் நாங்கள் பங்குப்பற்றப் போவதில்லை. ஏனெனில் எதிர்க்கட்சிகளிடம் உறுதியான கொள்கை கிடையாது - என்றார்.

ஏற்கனவே இந்தப் பேரணியில் முதன்மை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மலையகக் கட்சிகளும் பேரணியில் இருந்து விலகியுள்ளன.

## மஹாபொல....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனை பெற்று தற்போது சிறையில் உள்ள முன்னாள்

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவின் காலத்தில் மஹாபொல நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக முறைப்பாடு அளிப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிறையில் உள்ள முன்னாள் அமைச்சரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்வதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது, இருப்பினும் அவர் தனது வழக்கறிஞர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே ஆணைக்குழுவிடம் வாக்குமூலம் அளிக்க முடியும் என்று அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு நீதிமன்ற உத்தரவைப் பெற்று அமைச்சரிடத்தில் வாக்குமூலத்தினைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மஹாபொல புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதிச் சட்டத்தின்படி, நிதி தொடர்பான முடிவுகள் குறித்த புலமைப்பரிசில் திட்டத் தலைவருடன் கலந்தாலோசித்து எடுக்கப்படவேண்டும். அந்த நேரத்தில் பதவியில் இருந்த தலைவருடன் கலந்தாலோசிக்காமல் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள்...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உளவுத்துறையினராலும் தனியான விசாரணை நடத்தப்படும். இரு தரப்பு விசாரணைகளால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அச்சுறுத்தலை பொலிஸ்துறை மதிப்பீடு செய்யும். அதனடிப்படையில், நம்பகமான அச்சுறுத்தல் உறுதிசெய்யப்பட்டால் மட்டுமே பாதுகாப்புக்குரிய ஏற்பாடுகள் முன்னெடுப்பட்டு பொலிஸார் நியமிக்கப்படுவார்கள்.

விசாரணைகளின்போது எந்த அச்சுறுத்தலும் இல்லையென்றால், பாதுகாப்புக்குரிய பொலிஸார் வழங்கப்படமாட்டார்கள். அதேபோன்று, பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான ஒதுக்கீடுகள், புலனாய்வு அறிக்கையின் அடிப்படையில் அமையும் என்பதோடு சாதாரணமாக கோரிக்கை அல்லது அரசியல் தீர்மானங்களுக்கு உட்பட்டு எவருக்கும் பாதுகாப்பு வழங்கப்படாது என்றுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கார்த்திகை மாதத்தில் மரம் நடுவோம்

இலங்கையின் வானம் மென்மையுடன் தென்றல் வீசும் இந்தக் கார்த்திகை மாதம், நம் வாழ்வில் ஒரு ஆன்மிக நிம்மதியையும், இயற்கை மீதான நன்றியையும் நினைவூட்டும் பருவமாகும். இது ஒளியின் மாதம்; நம்பிக்கையின் மாதம்; மேலும், மண்ணுக்கும் ஈழத் தமிழ் மக்களுக்காக தம் இன்னுயிர்களை ஆகுதியாக்கியவர்களுக்கும் நன்றி சொல்லும் நேரம். அந்த நன்றியைச் சொல்லுவதற்கான மிகச்சிறந்த வழி – மரம் நடுதல்.

### மரம் - வாழ்வின் அடிப்படை

மரம் என்பது நமக்கு நிழல் தரும் பொருளல்ல; அது நமது சுவாசத்தின் ஆதாரம். ஒரு மரம் ஆண்டு தோறும் சுமார் 22 கிலோ உயிர்வாயுவை (ஒக்சிஜன்) உற்பத்தி செய்கிறது என அறிவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். அதேவேளை, ஒரு மனிதன் ஆண்டு தோறும் சுமார் 20 கிலோ உயிர்வாயுவை உபயோகிக்கிறான். அதாவது, ஒரு மனிதனின் வாழ்வை ஒரு மரம் காப்பாற்றுகிறது என்று ஒப்பீட்டளவில் பேசமுடியும்.

மழை, மண், நீர், காற்று – இவை அனைத்தையும் சமநிலையில் வைத்திருக்க மரங்கள் மிகப் பெரிய பங்கு வகிக்கின்றன. ஆனால் கடந்த சில தசாப்தங்களாக வன அழிப்பு வேகமெடுத்து, இலங்கை இக்கட்டை நோக்கி நகர்கிறது. இலங்கை வனப்பகுதி 1950களில் 44% ஆக இருந்தது. இன்று 25% க்கும் குறைந்து விட்டது. இதுவே வெப்பநிலையை உயர்த்தி, மழைமுறைகளைக் குழப்பி, குளங்களை வற்றச் செய்கிறது.

### உயிர் கொடுக்கும் பருவம்

தமிழ் மாதங்களில் கார்த்திகை மாதம் (நவம்பர்–டிசம்பர்) மழை நிறைந்து, நிலம் ஈரமாக இருக்கும் காலம். இதுவே மரம் நடுவதற்கு மிகச் சிறந்த பருவம். இந்த மாதத்தில் நாட்டப்படும் தாவரங்கள் எளிதில் வேரூன்றி வளர்வதற்கான இயற்கை ஈரப்பதம் மண்ணில் நிறைந்திருக்கும்.

இந்தச் சமயத்தில் நாம் குடும்பம் தோறும் குறைந்தது ஒரு மரம் நடுவது ஒரு பண்பாட்டுச் செயல் மட்டுமல்ல; அது புதிய தலைமுறைக்கான உயிர் முதலீடு ஆகும்.

மரம் நடுவது வெறும் சுற்றுச்சூழல் செயல் அல்ல; அது ஒரு வழிபாடு. காற்றில் நாம் காணும் தெய்வம், நீரில் நாம் உணரும் கருணை, மண்ணில் நாம் உணரும் தாய்மை – இவை அனைத்தையும் ஒருங்கிணைக்கும் புனிதச் செயல் மரம் நடுதல்.

பழமையான தமிழ் இலக்கியங்களிலும் மரங்களின் மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது:

'மரங்களே மன்னர்கள், மரங்களே காப்பாளர்கள்' எனப் பழமொழி கூறுகிறது.

அந்த அடையாளத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான நேரம் இதுவே.

### சமூக முயற்சியாக மாற்றுவோம்

கார்த்திகை மாதத்தில் பாடசாலைகள், ஆலயங்கள், கோயில்கள், மற்றும் ஊர் அமைப்புகள் ஒன்று சேர்ந்து மரம் நடும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம். மாணவர்களுக்கு 'ஒரு மாணவன் – ஒரு மரம்' என்ற இலக்கை ஏற்படுத்தலாம். வீட்டின் வாசலில் ஒரு பூச்செடி, தோட்டத்தில் ஒரு மரக்கன்று, பக்கத்து தெருவில் ஒரு நிழல் மரம் – இவை அனைத்தும் நம் பங்களிப்பு.

அரசு மட்டுமல்ல, மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டு சூழலில் சிறு இடமாவது மரத்திற்காக ஒதுக்க வேண்டும். பிளாஸ்டிக் பாட்டிலில் நட்டு வளர்த்த ஒரு செடியே நாளை பெரிய மரமாகி பல தலைமுறைகளுக்கு காற்றளிக்க முடியும்.

கார்த்திகை விளக்கு ஒளி இருளை நீக்குவது போல, மரம் நடுதல் வெப்பத்தையும் வறட்சியையும் நீக்கும் ஒளியாகும்.

இன்று நாம் நட்ட ஒரு மரம், நாளை நம் பிள்ளைகளுக்கு நிழலாக மாறும். அதனால், இந்த கார்த்திகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து மரம் நடுவோம்.

# பாடசாலைகளுக்கு நவ. 7 விடுமுறை

உயர்தர பரீட்சையை முன்னிட்டு நவம்பர் 7 சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளது.

டிசெம்பர் 8ஆம் திகதி பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மீள ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையை முன்னிட்டு விடுமுறை வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் பரீட்சைகள் டிசம்பர் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது

இந்நிலையில் டிசம்பர் 8 ஆம் திகதி பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மீள ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனை தொடர்ந்து 2026 ஜனவரி முதலாம் திகதி புதிய கல்வியாண்டுக்காக பாடசாலைகள் ஆரம்பமாகும். தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளில் 2026 ஜனவரி முதலாம் திகதி முதலாம் தவணையின் முதற்கட்ட கல்வி செயற்பாடுகள் ஆரம்பமாகி பெப்ரவரி 13ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

பெப்ரவரி 14 முதல் மார்ச் 2ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் மார்ச் 3ஆம் திகதி முதல் ஏப்ரல் 10 வரை இடம்பெறவுள்ளது. ஏப்ரல் 11 முதல் ஏப்ரல் 19 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் தவணை ஏப்ரல் 20ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை 24ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. மூன்றாம் தவணையின் முதற்கட்டம் ஜூலை 27 முதல் ஆகஸ்ட் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

ஆகஸ்ட் 8 முதல் செப்டெம்பர் 6ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் செப்டெம்பர் 7ஆம் திகதி முதல் டிசம்பர் 4ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாத்துறைச் சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

சுற்றுலாத்துறைச் சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அயலுறவுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இலங்கையின் சுற்றுலாத் துறையில் விரைவான வளர்ச்சியை அடையும் நோக்கத்தோடு இந்தத் திருத்தம் செய்யப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலாத் துறையை மேம்படுத்த இந்த ஆளும்தரப்பு நீண்டகாலத் திட்டத்தையும் இலக்கையும் கொண்டுள்ளது. சுற்றுலாத்துறையை மேம்படுத்த அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைப்பது அவசியம் என்பதால், இதற்காக தேசிய சுற்றுலா ஆணைக்குழு ஒன்றை நிறுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்

தேசிய சுற்றுலா ஆணைக்குழு மூலம் மாவட்ட மட்டத்தில் மற்றும் சுற்றுலா வலய மட்டத்திலும் கூட்டு சுற்றுலாக் குழுக்களை நிறுவுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது.

இந்த நோக்கத்திற்காக தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லாததால் சுற்றுலாச் சட்டம் திருத்தப்படுவதுடன் அந்தப் பொறுப்பு நிபுணர்கள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார்.

# ஆயுர்வேத மருத்துவ சேவைக்கு 303 மருத்துவர்கள் ஆட்சேர்ப்பு

303 புதிய மருத்துவர்கள் இன்று ஆயுர்வேத மருத்துவ சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பொது சுகாதார மருத்துவ அதிகாரிகள் உட்பட 303 ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளை இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான புதிய நியமனம், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில் கொழும்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

2018 ஆம் ஆண்டுக்குப் பின் உள்ளூர் ஆயுர்வேத மருத்துவ சேவைக்காக அதிக எண்ணிக்கையிலான மருத்துவ அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இதுவாகும்.

நாட்டில் ஆயுர்வேத சேவையின் எதிர்கால செயல்திறனை மேம்படுத்துவதற்கும், வினைத்திறனான நோயாளர்களுக்கான சேவையை வழங்குவதற்கும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்த ஆட்சேர்ப்பை மேற்கொள்ள ஆயுர்வேத திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அதற்கமை ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளோர் நாட்டில் அமைந்துள்ள மத்திய அரச ஆயுர்வேத மருத்துவமனைகள் மற்றும் மாகாண சபை ஆயுர்வேத மருத்துவமனைகளில் ஆயுர்வேத நிபுணர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த ஆயுர்வேத மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ் ஒரு வருடத்திற்கு விரிவான பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

மேற்படி மருத்துவ அதிகாரிகள், மாகாண சபைகளின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கும், பல உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் நியமிக்கப்பட உள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசியான் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக நடந்த பேச்சுவார்த்தையின் இறுதியில் நவம்பர் 1 முதல் சீன இறக்குமதிகள் மீதான ட்ரம்பின் 100% வரிகளின் அச்சுறுத்தலை நீக்கியதாக அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஸ்காட் பெசென்ட் கூறியுள்ளார்.

ஆசியான் மாநாட்டின் பின்னர், தென் கொரியாவின் கியோங்ஜுவில் நடைபெறும் ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (புஊசிளீ) உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக அக்டோபர் 30இல், அமெரிக்க அதிபர் டிரம்பும், சீன அதிபர் ஜியும் சந்தித்து, இந்த சந்திப்பில் வரிவிலக்கு விதிமுறைகளில் உடன்பாடு செய்துள்ளனர்.

இதன் விளைவாக அமெரிக்காவும் சீனாவும் ஒரு சாத்தியமான வர்த்தக ஒப்பந்தத்தின் கட்டமைப்பை ஒப்புக் கொண்டுள்ளன. இரு நாடுகளின் தலைவர்கள் சந்தித்த போது வர்த்தக ரீதியாக வரிகளை நீக்க முடிவு செய்யப்பட்டது.

இது அமெரிக்க வரிகளை அதிகரிப்பதையும் சீன அரிய மண் ஏற்றுமதி கட்டுப்பாடுகளையும் இடைநிறுத்துவதையும் நே க்காக்க கெ ண்டுள்ளது. ஆனால் சீன அதிகாரிகள் இந்த பேச்சுவார்த்தைகள் குறித்து மிகவும் கவனமாக உள்ளனர். மேலும் முன்னைய சந்திப்புகளின் முடிவுகள் குறித்து எந்த விவரங்களையும் வழங்கவில்லை என்றும் கூறப்படுகிறது.





## அமெரிக்க சீன வர்த்தக போர்:

# புதிய ஒப்பந்தமும்- பழைய முரண்களும்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

சீன அதிபர் ஜி சந்திப்பிற்குப் பிறகு சீனா மீதான வரிகளைக் குறைத்து, அரிய மண் சாலைத் தடையை முடிவுக்குக் கொண்டுவருவதாக டிரம்ப் அறிவித்துள்ளார். அக்டோபர் 30, 2025 அன்று தென் கொரியாவில் புசானில் உள்ள கிம்ஹே சர்வதேச விமான தளத்தில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடனான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இரு நாடுகளும் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

சீன இறக்குமதிகள் மீதான குறைந்த வரிகளை டிரம்ப் அறிவித்துள்ளார். மேலும் அரிய மண் தாதுக்களை அமெரிக்கா அணுகுவது தொடர்பான பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். மேலும் சீனாவுக்குச் சொந்தமான டிக்டோக்கின் அமெரிக்க செயல்பாடுகளை விற்பனை செய்வது குறித்த இறுதி ஒப்பந்தம் பற்றியும் அளாவப்பட்டது.

உலகின் இரண்டு பெரிய பொருளாதாரங்களுக்கு இடையே வர்த்தக பதட்டங்கள் அதிகரித்த பிறகு டிரம்பின் இந்த அறிவிப்புகள் ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங் ஆகியோர் தென் கொரியாவில் சந்தித்து, சீன அரசு சோயாபீன்ஸ், சோளம் மற்றும் பிற பண்ணை பொருட்களை அதிக அளவில் வாங்குவதை தொடங்கும் என்று டிரம்ப் அறிவித்தார்.

மேலும் அமெரிக்கா அரிய மண் பொருட்களை வாங்குவதை எளிதாக்கும் என்றும் சீனா கூறியுள்ளது. மேலும்

சீன நிறுவனங்கள் மீதான ஏற்றுமதி கட்டுப்பாடுகளை அமெரிக்கா நிறுத்தி வைக்கும் என்றும் கூறியுள்ளது. முழு அமெரிக்க-சீன வர்த்தக ஒப்பந்தம் 'மிக விரைவில்' கையெழுத்திடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### சீனா உலகின் மிகப்பெரிய உற்பத்தி நாடு:

சீனாவில் அரச ஆதரவு நிதி உதவி காரணமாக, இது பெரும்பாலும் உண்மையான உற்பத்திச் செலவை விடக் குறைவான விலையில் பொருட்களை உற்பத்தி செய்கிறது. உற்பத்தியான பொருட்கள் அமெரிக்காவிற்குள் நுழைய முடியாவிட்டால், சீன நிறுவனங்கள் அவற்றை வெளிநாடுகளில் மலிவாக விற்க முயற்சி செய்யலாம்.

இந்த அறிவிப்புகளுக்குப் பிறகு சில குறிப்பிட்ட தொழில்களும் நம்பிக்கையுடன் இருக்கும்.

தொழில்துறைக்கு தேவையான பல முக்கிய உலோகங்களை சுத்திகரிப்பதில் சீனா முக்கிய பங்கு வகிக்கிறது. உலகின் அரிய மண் தாதுக்களில் சுமார் 90% இதில் அடங்கும்.

இந்த மாத தொடக்கத்தில், பெய்ஜிங் இந்த பொருட்களின் மீதான கடுமையான உலகளாவிய ஏற்றுமதி கட்டுப்பாடுகளை முறைப்படுத்தியது. இன்றைய கூட்டத்திற்குப் பிறகு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், சீனாவிடமிருந்து இனி எந்தத் தடையும் இல்லை என்று கூறியுள்ளார்.



### சீன- அமெரிக்க முரண்பாடு:

அமெரிக்கசீனஉறவுநீண்டகாலமாகசிக்கலானதாகவும், முரண்பாடுகள் மிகுந்ததாகவும் இருந்து வருகிறது. இது வர்த்தகம், பொருளாதாரம், மனித உரிமைகள், மற்றும் பாதுகாப்பு போன்ற பல்வேறு துறைகளில் பல முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. இருப்பினும், இரு நாடுகளும் முக்கிய பிரச்சனைகளில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. மேலும் நிலையான மற்றும் சுமூகமான உறவை பராமரிப்பதற்கான நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றன.

இரண்டு நாடுகளுக்கும் இடையே வர்த்தக உறவுகள் நீண்ட காலமாக உள்ளன. ஆனால் வர்த்தக சமநிலை, சந்தை அணுகல் மற்றும் வர்த்தக விதிகள் குறித்து பல ஆண்டுகளாக கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன. வர்த்தகவரி பற்றிய பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இந்த பேச்சுவார்த்தைகள் ஒரு ஒப்பந்தத்தை எட்டுவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை சீனாவின் மனித உரிமை பதிவுகள் மீது அமெரிக்கா கவலைகளை வெளிப்படுத்தியுள்ளது. இதற்கு பதிலளித்த சீனா, இரு நாடுகளும் வெவ்வேறு வளர்ச்சி நிலைகளில் இருப்பதாகக் கூறியுள்ளது.

அத்துடன் பாதுகாப்பு மற்றும் புவிசார் அரசியலில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுடனான உறவை வலுப்படுத்துவதன் மூலம், சீன செல்வாக்கைக் குறைக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

ஆனாலும் தற்போதைய நிலையில், இரு நாடுகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இது உறவில் உள்ள சிக்கலான தன்மையைக் காட்டுகிறது. இது பதட்டங்களைக் குறைப்பதற்கான முயற்சியாக இருக்கலாம். இரு நாடுகளும், வர்த்தகம் மற்றும் பிற முக்கிய பிரச்சனைகளில் இணக்கமாகச் செயல்பட்டு, நிலையான உறவைப் பேணுவதற்கான விருப்பத்தைத் தெரிவித்துள்ளன

### வல்லரசாகும் சீனா:

தனது கடந்தகால மனித உரிமைச் செயற்பாடுகள் குறித்த அமெரிக்காவின் விமர்சனத்துக்கு சீனா கடுமையாக பதிலளித்து வருகிறது. அமெரிக்காவை பொறுத்தவரை கலாச்சார மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் தாம் வேறு ஒரு படிநிலையில் இருப்பதாக சீனா கூறியுள்ளது.

சீனாவின் மனித உரிமைகள் முன்னேற்றம் என்பது ஒரு புறவயப்பட்ட உண்மை என்றும், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகள் என்பது, சமத்துவம் மற்றும் இருதரப்பும் ஒருவரை ஒருவர் மதித்தல் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்பட வேண்டும் என்றும் சீன அரசு தெரிவித்துள்ளது.

கடந்த தசாப்த காலத்தில் அமெரிக்காவின் கேந்திர ரீதியிலான கவனம் எல்லாம் மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் குவிக்கப்பட்டிருந்ததாக சீனாவில் ஒரு கருத்து நிலவுகிறது. தற்போது அமெரிக்காவின் கவனம் சீனா நோக்கிய முனைப்புக்கள் அதிகரித்து வருவதாக சீனா தெரிவித்துள்ளது.

இதில் சீனாவின் கவலை என்னவென்றால், இந்த நிலைமைகளில் அமெரிக்காவின் கவனம் இனிமேல் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் மீது திரும்பினால், என்னாவது என்பதுதான்.

அதுவும் நிச்சயமாக சீனா தானும் ஒரு உலக வல்லரசாக வளர்ந்து வருகிறது. அதனது பூகோள பொருளாதார ஆர்வங்கள் நிச்சயமாக அதனது படைவல்லமையை அதுவும் குறிப்பாக கடற்படை வல்லமையை விரிவுபடுத்த விளையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை.

சீனா தானே தயாரித்த பல விமானந்தாங்கிக் கப்பல்கள் பல சர்வதேச கடலில் ஓடுகின்றன. ஒரு வளர்ந்துவரும் வல்லரசுக்கான பாதையில் சீனா பாரியளவில் முன்னேறி இருக்கிறது.

சீனாவின் கடந்தகால வரலாற்றைப் பார்த்தால் இது பிராந்தியத்திலும், உலகிலும் உள்ள முக்கிய வல்லரசுகளுடன் ஒரு உரசல் நிலையை ஏற்படுத்துவதற்கே அதிக சாத்தியத்தைக் காட்டுகின்றது. நிச்சயமாக அமெரிக்காவுடனும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

FREE GIFTS
உலகத்தரம் வாய்ந்த கணினிகள்
NALIN LAPTOPS
NALIN Information Technologies Pvt Ltd.
DIWALI MEGA OFFER
MOUSE | MOUSEPAD | BAG | 64GB PENDRIVE | POUCH | UMBRELLA | CARD READER

MEGA OFFER

hp — 3 years warranty — Windows 11
ASUS — 3 years warranty — Windows 11 — M365
DELL — 1 years warranty — Windows 11
Lenovo — 2 years warranty — Windows 11
msi — 2 years warranty

STARTING PRICE -RS: 137,000/=

Installment Payment Allowed
BOC COMMERCIAL BANK HNB VISA MasterCard
Terms & Conditions Apply
Island wide free delivery

Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722



# JRIDE



இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA



5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.10.2025இல் வெளியிடப்பெற்றது